304—

கலை மற்றும் அறிவியல் கல்லூரி

***20319—திரு. கே. பொன்னுசாமி:**

மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தாராபுரம் தொகுதி, தாராபுரத்தில் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி தொடங்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. பி. பழனியப்பன், உயர் கல்வித் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

திருப்பூர் மாவட்டம், தாராபுரம் சட்டமன்றத் தொகுதியில் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி தொடங்குவது குறித்த கருத்துரு ஏதும் அரசிடம் தற்போது இல்லை என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. கே. பொன்னுசாமி அவர்கள்.*

திரு. கே. பொன்னுசாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கல்விலிருக்கும் தேரையையும், கருவிலிருக்கும் உயிரையும் காத்துக்கொண்டிருக்கின்ற கடவுளைப்போல (மேசையைத் தட்டும் ஒலி) தமிழகத்தைக் காத்துக்கொண்டிருக்கின்ற கடவுள் நமது மாண்புமிகு அம்மா அவர்களின் மலர்ப் பாதம் தொட்டு வணங்குகிறேன். எனது தாராபுரம் தொகுதி 3 ஒன்றியங்களை உள்ளடக்கிய ஒரு பழமை வாய்ந்த நகரம் மற்றும் 5 பேரூராட்சிகளைக் கொண்ட ஒரு பெரிய தொகுதியாகும். தாராபுரம் நகராட்சி 1916-ல் ஆரம்பிக்கப்பட்ட ஒரு பழமை வாய்ந்த நகராட்சி. அடுத்த ஆண்டு 100-வது ஆண்டைத் தொட இருக்கின்ற நகராட்சி. இந்தப் பெரிய தொகுதியில் அரசு சார்ந்த கலை மற்றும் அறிவியல் கல்லூரி ஒன்றுமே இல்லை. ஆகவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மாண்புமிகு அம்மா அவர்களின் கவனத்திற்குக் கொண்டு சென்று, கலை மற்றும் அறிவியல் கல்லூரி அமைத்துக் கொடுக்குமாறு பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. பி. பழனியப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டில் மொத்தம் 697 கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள் செயல்பட்டு வருகின்றன. இதில் அரசுக் கல்லூரியாக 75 கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள் செயல்பட்டு வருகின்றன. மாண்புமிகு முதல்வர் அம்மா அவர்கள் மூன்றாவது முறையாகப் பொறுப்பேற்பதற்கு முன்பு, ஏற்கெனவே 62 அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள்தான் இருந்தன. மாண்புமிகு முதல்வர் அம்மா அவர்கள் 13 புதிய அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளை உருவாக்கித் தந்ததன்மூலம் இன்றைக்கு 75 அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள் செயல்பட்டு வருகின்றன. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் திருப்பூர் மாவட்டம், தாராபுரம் நகராட்சி 100 ஆண்டுகள் நிறைவு செய்யவிருக்கின்ற சூழ்நிலையை எடுத்துச் சொல்லி இருக்கிறார்கள். திருப்பூர் மாவட்டத்தில் பெண்களுக்கான ஒரு அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரியும், பொதுவான மூன்று கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளும் செயல்பட்டு வருகின்றன. பக்கத்திலே உள்ள உடுமலைப்பேட்டையிலே ஓர் அரசு உதவிபெறும் கலை மற்றும் அறிவியல் கல்லூரி செயல்பட்டு வருகிறது. அந்த மாவட்டத்திலே இன்னொரு கல்லூரி தொடங்கப்படவேண்டும் என்ற அடிப்படையில், காங்கேயத்திலே ஒரு புதிய அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரியை சென்ற ஆண்டு மாண்புமிகு முதல்வர் அம்மா அவர்கள் தொடங்கி வைத்திருக்கிறார்கள். ஆக 4 அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள் செயல்பட்டுக் கொண்டிருக்கின்றன.

முற்பகல் 10–30

மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தாராபுரம் நகரத்தில் ஓர் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி வேண்டும் என்று கோரிக்கை வைத்திருக்கிறார்கள். இக்கல்லூரிகள் தொடங்கப்பட வேண்டும் என்றால், அது கிராமப் பகுதி என்றால், அங்கு 10 ஏக்கர் நிலம் இருக்கவேண்டும்; நகராட்சிப் பகுதியாக இருந்தால் 5 ஏக்கர் நிலம் இருக்கவேண்டும்; மாநகராட்சிப் பகுதி என்றால் 3 ஏக்கர் நிலம் இருக்கவேண்டும் என்று விதி இருக்கிறது. மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் தேவைக்கேற்ப புதிய கலைக் கல்லூரிகளை அமைக்க வேண்டும் என்று அறிவித்திருக்கிறார்கள். இதில் நிலங்களைக் கையகப்படுத்துவதில் சிரமம் இருக்கிறது; தற்போது நிலம் கிடைப்பது என்பது மிகவும்

அரிதாக இருக்கின்றது. மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிடுகின்ற பகுதி நகராட்சிப் பகுதி என்பதால் 5 ஏக்கர் நிலம் தேவைப்படும். அவ்வாறு 5 ஏக்கர் நிலம் இருந்தால் மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் கோரிக்கையினை மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் கனிவான பார்வைக்கு எடுத்துச் சென்று அரசு பரிசீலிக்கும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. கே. பொன்னுசாமி அவர்கள்.*

திரு. கே. பொன்னுசாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய பதிலுக்கு நன்றி. நாங்கள் அதற்கான இடத்தைத் தேர்வு செய்து தருகிறோம். அதனை மாண்புமிகு அம்மா அவர்களுடைய கனிவான பார்வைக்கு எடுத்துச் சென்று, கல்லூரியை அமைத்துக் கொடுக்குமாறு கேட்டுக்கொள்கிறேன். நன்றி, வணக்கம்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் திரு. அழகாபுரம் ஆர். மோகன்ராஜ் அவர்கள்.*

திரு. அழகாபுரம் ஆர். மோகன்ராஜ்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சேலம் வடக்கு சட்டமன்றத் தொகுதியில் இயங்கிவரும் சேலம் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் முதுநிலை பாடப் பிரிவு தொடங்கப்பட வேண்டும் என்று ஏற்கெனவே கோரிக்கை வைத்துள்ளேன். அதுமட்டுமல்லாமல், அந்தக் கல்லூரி வளாகத்தில் நிறைய இடம் இருக்கின்றது. எனவே, அங்கு ஒரு கலையரங்கம் கட்டித்தர வேண்டும் என்று நான் கடந்த சட்டமன்ற கூட்டத் தொடரின்போது பேசியிருந்தேன். ஆகவே, அங்கு முதுகலை பட்டப்படிப்பு துவங்குவது குறித்தும், கலையரங்கம் கட்டித்தருவது குறித்தும் அரசின் செயற்குறிப்பில் உள்ளதா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. பி. பழனியப்பன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் மூன்றாவது முறையாக தமிழக முதல்வராகப்*

பொறுப்பேற்ற பின்பு, இதுவரையில் இல்லாத அளவிற்கு அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் 797 புதிய பாடப் பிரிவுகள் தொடங்குவதற்கு அனுமதி வழங்கியிருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) கடந்த மைனாரிட்டி திராவிட முன்னேற்ற கழக 5 ஆண்டுக் கால ஆட்சியில், 290 புதிய பாடப் பிரிவுகள்தான் தொடங்கப்பட்டன. ஆனால், மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆட்சிக் காலத்தில் 797 புதிய பாடப் பிரிவுகள் தொடங்கப்பட்டிருக்கின்றன. எனவே, கல்லூரி முதல்வர்களிடமிருந்து கோரிக்கை வரப்பெறும்போது, அதனைப் பரிசீலித்து புதிய பாடப் பிரிவுகள் தொடங்குவதற்கு மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள் ஆணை வழங்கியிருக்கிறார்கள். ஆகவே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்ட அந்தக் கல்லூரியிலிருந்து அரசுக்குக் கருத்துரு வருகின்றபட்சத்தில், அதுகுறித்து முடிவெடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கலையரங்கம் கட்டவேண்டும் என்ற ஒரு கோரிக்கையினையும் வைத்திருக்கிறார்கள். தற்போது புதிய கல்லூரிகள் தொடங்கியிருக்கின்ற காரணத்தினால், அனைத்துக் கல்லூரிகளுக்கும் வகுப்பறைகள் கட்டவேண்டிய சூழ்நிலை இருக்கின்றது. ஏற்கெனவே மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள் மொத்தம் 52 கல்லூரிகளைக் கொடுத்திருக்கிறார்கள்; 37 கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள், 4 பொறியியல் கல்லூரிகள்; 11 பல்வகை தொழில்நுட்ப கல்லூரிகளைக் கொடுத்திருக்கிறார்கள். இந்தக் கல்லூரிகளுக்கான கட்டடங்கள் கட்டுவதற்காக மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இதுவரையில் 1,100 கோடி ரூபாய் ஒதுக்கித் தந்திருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) ஓர் அரசாங்கத்தால் அறிவிக்கப்பட்டு இருக்கின்ற கல்லூரிகளைக் கட்டுவதற்கு, தனியாக இப்படியொரு தொகுப்பு நிதியாக இதுவரையிலும் எந்த அரசும் ரூ.1,100 கோடி வழங்கியதில்லை. அந்த நிதியினை மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் வழங்கியிருக்கிறார்கள். எனவே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியைப் பயன்படுத்தி, கலையரங்கத்தைக் கட்டிக்கொள்ளவேண்டும் என்று மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. சி.த. செல்லப்பாண்டியன் அவர்கள்.

2014 ஆகஸ்ட் 1] .

திரு. சி.த. செல்லப்பாண்டியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உலகத் தமிழர்களின் ஒப்பற்ற தலைவி மாண்புமிகு தமிழக முதல்வர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்குகிறேன். தூத்துக்குடி மாநகராட்சி பெரிய பகுதி; அதுமட்டுமல்லாமல் அப்பகுதியைச் சுற்றிலும் கிராமங்கள் அதிகமாக உள்ளன. அங்கே தனியார் கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள்தான் இருக்கின்றன. அங்கு அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள் இல்லை. ஆகவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தூத்துக்குடியில் ஓர் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரியினைத் தொடங்க முன்வருவார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. பி. பழனியப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே தூத்துக்குடியில் ஓர் அரசு சார்ந்த கலை மற்றும் அறிவியல் கல்லூரி செயல்பட்டுக்கொண்டிருக்கின்றது. இருப்பினும் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கலை மற்றும் அறிவியல் கல்லூரி வேண்டுமெனக் கேட்டிருக்கிறார்கள். தற்போது கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் மாணவர்கள் சேர்க்கை அதிகமாக நடைபெற்று வருவதைக் கருத்திற்கொண்டு, மாண்புமிகு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் கனிவான பார்வைக்கு இதை எடுத்துச் சென்று, நிதிநிலைக்கேற்ப அரசு பரிசீலனை செய்து, நடவடிக்கை எடுக்கும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தங்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் செல்வி கே. பாலபாரதி அவர்கள்.

முற்பகல் 10-35

செல்வி கே. பாலபாரதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திண்டுக்கல் அரசினர் பெண்கள் கல்லூரிக்கு 2012 ஆம் ஆண்டில் B.Sc., M.Sc. Computer Science Course அரசால் வழங்கப்பட்டது. நன்றி. Computer Science Course முடித்த பிறகு, B.Ed., கல்லூரியில் சேர்ந்து, அதிலேயும் Computer Science படிக்கின்றார்கள்.

ஆனால், அப்படி படித்து வருபவர்கள் ஆசிரியர் தகுதித் தேர்வில் அனுமதிக்கப்படுவதில்லை. B.Ed.-லே Computer Science இருக்கிறது. கல்லூரியிலும் இருக்கிறது. எப்படியும் தகுதித் தேர்வில் தேர்ச்சி பெற்றால்தான், அவர்கள் ஆசிரியர் பணிக்குச் செல்ல முடியும். ஆனால், அவர்களுக்குத் தடை விதிக்கப்பட்டிருக்கிறது. ஆகவே, Computer Science, B.Ed., M.Ed. முடித்தவர்களை T.R.B. மூலமாக நடத்தப்பெறும் தகுதித் தேர்வினை எழுதிட அனுமதிப்பதற்கு தாங்கள் முன்வருவீர்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. பி. பழனியப்பன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புதிய பாடத் திட்டங்களைக் காலத்தினுடைய சூழ்நிலைக்கேற்ப பல்கலைக்கழகங்கள் மாற்றியமைக்கின்றன. அப்படி பாடத் திட்டங்களை மாற்றியமைக்கின்றபோது, சில படிப்புகள் ஆராய்ச்சியை மையமாக வைத்து அமைக்கப்படுகின்றன. சில பாடப் பிரிவுகளைப் படிக்கின்றபோது, அது வேலைக்கும் உதவுகிறது. இப்படி பல்கலைக்கழகங்கள் பாடத் திட்டங்களை மாற்றியமைக்கின்றபோது, அரசினுடைய கவனத்திற்குக் கொண்டுவராமல் தமிழ்நாடு மாநில உயர் கல்வி மன்றத்தின் கவனத்திற்குக் கொண்டுவந்து, அந்தப் பாடத் திட்டங்கள் வேலைவாய்ப்பிற்கும் உகந்ததா என்று பார்த்து அமைக்கவேண்டும். அந்த அடிப்படையிலே, கடந்த மைனாரிட்டி திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் இதுபோன்று பாடத் திட்டங்களை மாற்றியமைத்ததன் காரணமாக, தற்போது ஆசிரியர் தேர்வு வாரியத்தின் மூலமாக நடத்தப்படுகின்ற தகுதித் தேர்வினை எழுதினால்தான் ஆசிரியர்களாக நியமிக்க முடியும் என்ற சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது. அதையும் கருத்திலேகொண்டு சில subject-களுக்கு equivalence certificate கொடுப்பதற்கு அரசால் ஒரு கமிட்டி அமைக்கப்பட்டு, அந்தக் கமிட்டியின் பரிந்துரைக்கு ஏற்ப தகுதிச் சான்றிதழ்கள் வழங்கப்படுகின்றன.*

நமது மாநிலத்தைப் பொறுத்தவரையில், ப்ளஸ் 2 அல்லது அடிப்படைக் கல்விக்குத் தேவைப்படுகின்ற, தொடக்கக் கல்விக்குத் தேவைப்படுகின்ற ஆசிரியர்களுக்கான தகுதித் தேர்விற்கு, பொதுப் பாடப் பிரிவில் படித்த ஆசிரியர்கள்தான் தேர்வு

2014 ஆகஸ்ட் 1]

செய்யப்படுகின்றார்கள். Computer Science என்பது சிறிய படிப்பாக இருக்கின்ற காரணத்தால், அதைப் படிப்பவர்களுக்கு தகுதித் தேர்வில் வாய்ப்பு இல்லாத சூழ்நிலை இருக்கிறது. அதிலே முதுநிலை பாடத் திட்டங்கள் வருகின்றபோது, அந்த வாய்ப்பு இருக்கிறது. ஆகவே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்கின்ற கருத்தினை, மாண்புமிகு முதல்வர் அம்மா அவர்களின் கனிவான பார்வைக்கு எடுத்துச் சென்று, அந்தப் பாடத் திட்டத்தை இணையதளம் வழியாக மாற்றியமைக்க, அரசு உரிய நடவடிக்கையை எடுக்கும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 305, மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. சண்முகவேலு, மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் அவர்கள்.*

305—

பகுதிநேர நியாய விலைக் கடை

***13100—திரு. சி. சண்முகவேலு:**

மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருப்பூர் மாவட்டம், உடுமலைப்பேட்டை வட்டம், ஜல்லிப்பட்டி ஊராட்சி, லிங்கமாவூர் கிராமத்தில் பகுதிநேர நியாய விலைக் கடை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. இரா. காமராஜ், உணவுத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) உடுமலைப்பேட்டை வட்டம், ஜல்லிப்பட்டி ஊராட்சிக்குட்பட்ட, வெங்கிட்டாபுரம் என்ற ஊரில், சின்னகுமாரபாளையம் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு கடன் சங்கம் நடத்தும் லிங்கமாவூர் முழுநேர நியாய விலைக் கடை 291 குடும்ப அட்டைகளுடன் செயல்பட்டு வருகிறது. இக்கடையுடன் லிங்கமாவூர் கிராமத்தைச் சேர்ந்த 175 குடும்ப அட்டைகள் இணைக்கப்பட்டுள்ளன. இந்த லிங்கமாவூர் கிராமத்தைச் சேர்ந்த 175 குடும்ப அட்டைகளைப் பிரித்தால், தாய்க் கடையில் 116 குடும்ப